**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.678/2024                                        நாள்- 04.06.2025

**பி.வா.சா.1- பொன்ராஜ்**

**<u>பி.வா.சா.1-ன் குறுக்குவிசாரணை வாதி தரப்பில்</u>**

வழக்கில் கண்ட சொத்தின் சர்வே எண் , விஸ்தீரணம் பற்றி எனக்கு தெரியும். வழக்கு சொத்தை கிரையம் பதிவு செய்யும் போது யார் பெயரில் பட்டா இருந்தது என்று கேட்டால் பெயர் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தின் பட்டாவை பார்த்துள்ளேன் ஆனால் ஞாபகம் இல்லை. தற்போது வழக்கு சொத்து யார் பெயருக்கு பட்டா உள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் பட்டா கூட்டு பட்டாவா அல்லது தனிப்பட்டாவா உள்ளதா என்று கேட்டால் கிரையம் வாங்கிய சொத்தை நான் வேறு நபருக்கு கடந்த 1வருடத்திற்குள்ளாக கிரையம் கொடுத்துவிட்டேன். கிரையம் கொடுத்த விவரத்தைநான் முதல்விசாரணையில் கூறவில்லை. நான் மாங்குடியை சேர்ந்த ஒரு நபருக்கு கொடுத்துவிட்டேன். நான் கிரையம் மாரிமுத்துவிடமிருந்து வாங்கினேன். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது கிரையம் கொடுத்த நபர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. மாரிமுத்து என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டால் நான் வாங்கி கிரைய பத்திரத்தைரத்து செய்யவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு பற்றிய விவரங்களை மறைத்து தான் மாங்குடியை சேர்ந்த நபருக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் நான்கு மால்கள் விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கு சொத்து காலிமனை. வழக்கு சொத்தின் பிளாட்டு எண்.96 ஆகும். வழக்கு சொத்தை வாதி என் பெயருக்கு கிரையம் பதிவு

செய்து கொடுக்கும்போது அரசு மதிப்பு எவ்வளவு , மார்க்கெட் மதிப்பு எவ்வளவு என்று கேட்டால் எனக்கு தெரியும். பிளாட்டின் அரசு மதிப்பு ரூ.1,25,000/- ஆகும், மார்க்கெட் மதிப்பு ரூ.1,50,000/-ஆகும். மாரிமுத்து மீது நான் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கேட்டால் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஒரு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அது எந்த நீதிமன்றம் என்று எனக்கு பெயர் தெரியாது. வழக்கு எண் பற்றியும் எனக்கு தெரியாது. என்னிடம்காட்டப்படும் பிராது நகல் தான் என் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை நகல் என்றால் சரிதான் அது வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்குரையில் ஆங்கி லத்தில் எழுதப்பட்டுள்ளதால் எனக்கு அர்த்தம் தெரியாது என்றால் சரிதான் ஆனால் அடமான சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு சொத்து வா.சா.ஆ.13 வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. தற்போது வா.சா.ஆ.13 வழக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. வா.சா.ஆ.13 வழக்கில் நான் முதல்விசாரணையில் சாட்சியம் அளித்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டேன் என்றால் சரிதான். என்னுடைய சாட்சியம் தான் என்னிடம் காட்டப்படுவது. அது வாசா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது (வா.சா.ஆ.14 உயிருடன் இருக்கும் ஒரு நபரின் வாக்குமூலத்தை ஆவணமாக குறியீடு செய்யமுடியாது என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டதால் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) ஸ்ரீவில்லிபுத்தூரில் நடக்கும் வழக்கில் கண்ட அடமானபத்திரமும், இந்த வழக்கின் கிரையப்பத்திரமும் ஒரே நாளில் , ஒரே சமயத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆவண

எழுத்தர் செலவு , பத்திர செலவினை வாதி செலுத்தவில்லை நான் தான் செலுத்தினேன். அடமானத்தொகை ரூ.8,00,000/- ற்கு பதிவு செய்யப்பட்டது நான் கருப்பட்டி வியாபாரம் செய்து வருகிறேன். நான் கருப்பட்டி வியாபாரம் செய்து வந்தேன் என்று காட்டுவதற்கு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. எனக்கு கிரையம் பதிவு செய்த காலத்தில் யூனியன் வங்கியில் கணக்கு இருந்தது. இந்த அடமானப்பத்திரத்தில் கண்ட தொகையையும், கிரைய பத்திரத்தில் கண்ட தொகையையும் செலுத்தும்அளவிற்கு எனக்கு வருமானம் கிடையாது என்றால் சரியல்ல. தற்போது நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். அதை தாக்கல் செய்வதற்கு தயாரா க இருக்கிறேன். யூனியன் வங்கியின் கணக்கு வழக்கை தாக்கல் செய்வததில்எனக்கு ஆட்சேபணை இல்லை . இராஜபாண்டிக்கும், மாரிமுத்துவிற்கும் என்ன பிரச்சனை ஏற்பட்டிருந்து என்ற விவரம் இந்த வழக்கிற்கு பிறகு தான் எனக்கு தெரியும். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக மாரிமுத்து எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் பற்றி தெரியும். அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பட்டதா என்று எனக்குதெரியாது. வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும். உண்மையிலேயே நான் வழக்கு சொத்திற்கும், அடமான பத்திரத்திற்கும் தொகையை கொடுத்திருந்தால் வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அனுப்பினேனா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரிந்திருக்கும் என்றும், நான் இராஜபாண்டி என்பவரின் பிணாமி என்பதனால் தான் அந்த விவரம் எனக்கு தெரியவில்லலை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தின் கிரையம் தொாகை என்னால் கொடுக்கப்படவில்லை என்றும், இராஜபாண்டி வாதியை அரட்டல் மிரட்டல் செய்து கட்டாயத்தின் பேரில் என்

பெயருக்கு பெயரளவிற்கு கிரைய ஆவணம் பதிவு செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எந்தவித மறுபயனும் இல்லாமலும், இராஜபாண்டியின் அரட்டல் மிரட்டல் மிரட்டினால் தான் வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டதால் வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடியதென்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.